சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 186 | 30.12.2025 | TUESDAY | MARGAZHI : 15 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 186 | 30.12.2025 | செவ்வாய்கிழமை | மார்கழி : 15 | விலை : ரூ.5/–

3 “வரும் சட்டமன்ற தேர்தலில் நீதியின் நெருப்பில் திமுக சுட்டு பொசுக்கப்படும்” - நயினார் நாகேந்திரன்

4 தமிழகத்தில்தான் ரேஷன் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்கிறது - புதிய நியாய விலைக்கடை திறப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

2 “திமுக ஆட்சிக்கு வந்த பிறகுதான் கஞ்சா கலாச்சாரம் உச்சத்தை அடைந்துள்ளது” -அன்புமணி

## “ஜிஎஸ்டி மூலம் வியாபாரிகளின் வாழ்க்கையை

# “மத்திய அரசு வதைக்கிறது”

## உதயநிதி ஸ்டாலின் பேச்சு



■ யோகி ஆதித்யநாத் ஆளும் உத்திரபிரதேசம் மாநிலத்திலிருந்து கொடைக்கானல் வருகை புரிந்த அம் மாநிலத்தின் பாரதிய ஜனதா கட்சியின் துணைத் தலைவர் தினேஷ் சர்மா அவர்களை பாரதிய ஜனதா கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணை தலைவர் மருத்துவர் மதன்குமார் அவர்களது அறிவுறுத்தலின்படியும், பாரதிய ஜனதா கட்சியின் கொடைக்கானல் நகரத் தலைவர் சரவணன் அவர்களது ஆலோசனை படியும் அக்கட்சியின் சார்பாக பொன்னாடை போர்த்தி சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அதில் கட்சியின் நகர பொதுச் செயலாளர் மணிவாசவன் மற்றும் மாவட்ட, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் அனைத்து நிர்வாகிகளும் அவருடன் பிரதம மந்திரியின் மன் கி பாத் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் சார்பில், வீர சிறுவர்கள் தினம் டிசம்பர் 26 ஐ முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்காக நடைபெற்ற பேச்சுப்போட்டி, ஓவியப்போட்டி மற்றும் கிராப்ட் ஓர்க் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

சென்னை: டிச.30-

சென்னை, கலைவாணர் அரங்கில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் இயங்கி வரும் திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கத்தின் பொன் விழா நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசும்போது, ‘‘ஒரு சங்கத்தைத் தொடங்குவது எளிது, ஆனால், அதனைத் தொடர்ந்து நடத்துவது சுலபம் இல்லை. இந்தத் திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கத்தை 50 ஆண்டுகளாகக் கட்டுப்பாட்டோடும் ஒற்றுமையோடும் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறீர்கள். அதற்காக இந்த சங்கத்தின் முன்னாள் மற்றும் இந்நாள் நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிகர்களுக்கும் திராவிட இயக்கத்துக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. திராவிட இயக்கத்தின் தந்தையாக விளங்கும் பெரியார், ஈரோட்டில் ஒரு வணிகர் குடும்பத்தில் பிறந்தவர்தான். அண்ணா திமுகவைத் தொடங்கிய பிறகு, இந்த இயக்கம் வளர்ந்ததே கடைகளில்தான்.

தேநீர்க் கடை, மிதிவண்டிக் கடை, சலூன் கடை எனப் பல்வேறு கடைகளில்தான் திமுக வளர்ச்சி அடைந்தது. அக்காலத்தில் கடைகளில் அரசியல் பேசி வளர்ந்த இயக்கம் என்பதால்தான், திமுக மீது வணிகர்களுக்கும், வணிகர்கள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எப்போதுமே தனிப்பாசம் உண்டு. இந்தப் பாசத்திற்கும் பந்தத்திற்கும் இந்த அரங்கமே ஒரு சிறந்த உதாரணம்.

குறிப்பாக, இந்தத் திருவல்லிக்கேணி வியாபாரிகள் சங்கத்திற்கும் எனக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு.இந்தச் சங்கம் வியாபாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையே, அரசாங்கத்திற்கும்



வியாபாரிகளுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்கிறது.

அதோடு சேர்த்து, சட்டமன்ற உறுப்பினர் என்கின்ற முறையில் எனக்கும் தொகுதியில் உள்ள வணிகர்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருக்கிறது. மொத்தத்தில், திருவல்லிக்கேணியில் ஒரு மூன்றடுக்குப் பாலம் போல இந்த வியாபாரிகள் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தங்களுக்குப் பயன்படுவதோடு சமூகத்திற்கும் பயன்படுகின்ற தொழில்தான் இந்த வணிகத் தொழில். உள்ளூரில் தொடங்கி உலகம் முழுவதும் உற்பத்தியாகின்ற பொருட்களை எல்லாம் பொதுமக்களுக்குக் கொண்டு வந்து சேர்ப்பவர்கள் வணிகர்களாகிய நீங்கள்தான். பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை எளிமையாக்குவதும் நீங்கள்தான். அப்படிப்பட்ட உங்களுக்கு எல்லா வகையிலும் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட மாடல் அரசும் என்றைக்கும் துணை நிற்கும்.

ஆனால், இன்றைக்கு ஒன்றிய அரசு என்ன செய்துகொண்டு இருக்கிறது? ஒன்றிய அரசு உங்கள் வாழ்க்கையைச் சிரமப்படுத்தும் வகையில், ஜிஎஸ்டியைக் (GST) கொண்டு வந்து வாட்டி வதைக்கிறது.

ஆனால், நம்முடைய திராவிட மாடல் அரசும், முதல்வரும் வணிகர்களின் நலனைப் பேணிக் காக்கின்ற அரசாக, பேணிக் காக்கின்ற முதல்வராக சிறப்பாகச் செயல்படுகிறார்கள்.

முந்தைய பத்தாண்டு கால அதிமுக ஆட்சியில் வணிகர்கள் எவ்வளவு சிரமப்பட்டீர்கள் என்பது உங்களுக்கே நன்றாகத் தெரியும். ஆனால், நம்முடைய அரசு அப்படி இல்லை. நம்முடைய முதல்வர் எப்போதுமே வணிகர்களுடைய கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கின்ற முதல்வராக இருந்து வருகிறார். அண்ணன் விக்கிரமராஜா, முதல்வர் என்னென்ன செய்தாரோ அதையெல்லாம் உங்களுக்குச் சுட்டிக் காட்டினார்.

கடந்த மே மாதம் வண்டலூரில் ஏற்பாடு செய்திருந்த வணிகர்கள் மாநாட்டில், மே 5ஆம் தேதியை வணிகர் தினமாக அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தீர்கள். உடனடியாக நம்முடைய முதல்வர் அறிவித்தார்.

கருணாநிதி தொடங்கிய வணிகர் நல வாரியத்தை முந்தைய ஆட்சியாளர்கள் முடக்கி வைத்திருந்தார். அந்த நல வாரியத்தைச் சீரமைத்து, அதன் நிர்வாகத்தில் இடம்பெற்றிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 20லிருந்து 30ஆக உயர்த்தியவர் முதல்வர் ஸ்டாலின்.

அதேபோல, வணிகர் நல வாரியத்தில் சேருவதற்கான உறுப்பினர் ஆயுள் சேர்க்கைக் கட்டணத்தை நீக்கி, பலரும் உறுப்பினராகச் சேர வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தது நம்முடைய அரசு. மிக முக்கியமாக, வணிகர் நல வாரிய உறுப்பினர் குடும்ப நல நிதி உதவித்தொகை முன்பு ஒரு இலட்சம் ரூபாயாக இருந்தது. அதனை முதலில் மூன்று லட்சமாகவும், மீண்டும் ஐந்து லட்சமாகவும் உயர்த்தி, வணிகர்களுடைய குடும்பங்களைப் பாதுகாத்து வருகிறார்.

வணிக உரிமங்களைப் புதுப்பிக்கும் முறைகளை, திராவிட மாடல் அரசு எளிமையாக்கி இருக்கிறது. வரி நிலுவைத் தொகையைத் தள்ளுபடி செய்யச் சிறப்புச் சமாதானத் திட்டத்தை நம்முடைய அரசு அறிவித்தது. அதன்படி சுமார் 1,200 கோடி ரூபாய் அளவுக்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டு, வணிகர்கள் நலன் பாதுகாக்கப்பட்டது.

மாநகராட்சி மற்றும் நகராட்சி கடைகளின் குத்தகை காலம் 9 ஆண்டுகளில் இருந்து 12 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. முக்கியமாக, 24 மணி நேரமும் கடைகளைத் திறந்து வைக்கலாம் என்று உத்தரவிட்டார். இப்படி, வணிகர்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற வகையில் பல அறிவிப்புகளையும் திட்டங்களையும் திராவிட மாடல் அரசு செய்துள்ளது.

இங்கு வந்துள்ள வணிகர்கள் எதையும் சரியாக எடை போட்டுப் பார்ப்பீர்கள். அதேமாதிரி, நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் திட்டங்களையும் சரியாக எடை போட்டுப் பாருங்கள். குறிப்பாக, வணிகத்தில் வெற்றிகரமாக இருக்க வேண்டுமானால் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். அதிலும் நிலையான வெற்றி பெற வேண்டுமானால், அந்த நம்பிக்கையைத் தக்க வைக்க வேண்டும். வியாபாரிகளின் நம்பிக்கையைத் தொடர்ந்து காப்பாற்றக்கூடிய வகையில் திராவிட மாடல் அரசு என்றைக்கும் வணிகர்களின் தோழனாக, பாதுகாவலனாக இருக்கும்” என தெரிவித்தார்.

## “விற்பனையில் வரலாற்று சாதனை” பழனி தேவஸ்தான பஞ்சாமிர்தம்...

### ஒரே நாளில் ரூ.75.53 லட்சத்துக்கு விற்பனை விற்பனை மையங்கள் 24 X 7 செயல்படும் இணை ஆணையர் மாரிமுத்து தகவல்

திண்டுக்கல், டிச.30-

திண்டுக்கல் மாவட்டம் பழநி முருகன் கோயிலில் சென்ற டிசம்பர் 26ம் தேதி ஒருநாள் மட்டும் ரூ.75.53 லட்சத்துக்கு அபிஷேக பஞ்சாமிர்தம் விற்பனையானது.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு பஞ்சாமிர்தம் பிரசாதமாக வழங்கப்படுகிறது. பழநி தேவஸ்தானம் சார்பில் சுமார் 15 நிரந்தர பஞ்சாமிர்தம் விற்பனை மையங்கள் மற்றும் ஒரு தற்காலிக பஞ்சாமிர்த விற்பனை மையம் 22 திறக்கப்பட்டுள்ளது. மேலும், தேவஸ்தானம் சார்பில் அபிஷேக பஞ்சாமிர்தம் 470 கிராம் டப்பா ரூ.40க்கும், டின் ரூ.45க்கும், 200 கிராம் டப்பா ரூ.20க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

சாதாரண நாட்களில் தினமும் 20 ஆயிரம் பஞ்சாமிர்தம் டப்பாக்கள் விற்பனையாகும். சபரிமலை ஐயப்ப சீசன், தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்ளிட்ட திருவிழாக் காலங்களில் தினமும் 1.50 லட்சம் பஞ்சாமிர்தம் டப்பாக்கள் விற்பனையாகும்.

தற்போது சபரிமலை ஐயப்ப சீசன், தைப்பூசத் திருவிழாவை முன்னிட்டு பழநி கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவ்வாறு வரும் பக்தர்களுக்கு எந்நேரமும் பஞ்சாமிர்தம் கிடைக்கும் வகையில் தேவஸ்தான பஞ்சாமிர்த விற்பனை மையங்கள் 24 மணி நேரமும் திறந்தே வைக்கப்பட்டுள்ளன.

பக்தர்களின் வசதிக்காக,



மலைக்கோயில், கிரிவலப்பாதை உட்பட 15 இடங்களில் பஞ்சாமிர்தம் விற்பனை மையம் அமைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் சபரிமலை ஐயப்ப சீசனை முன்னிட்டு, அதிகபட்சமாக 2025 டிச.26ம் தேதி ஒரு நாள் மட்டும் ரூ.75 லட்சத்து 53 ஆயிரத்து 780க்கு பஞ்சாமிர்தம் விற்பனையாகி முந்தைய சாதனையை முறியடித்துள்ளது.

பழநி முருகன் கோயில் வரலாற்றிலேயே, ஒரே ஒரு நாளில் லட்சக்கணக்கான




ரூபாய்க்கு பஞ்சாமிர்தம் விற்பனையான நாட்களாக மேற்கண்ட 5 நாட்கள் இடம் பிடித்துள்ளன என்று திருக்கோவிலின் இணை ஆணையர் மாரிமுத்து அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும் செய்தியாளர்களிடம் கோவிலின் இணை ஆணையர் அவர்கள் தெரிவிக்கையில் பழநி தேவஸ்தானம் சார்பில், சுகாதார முறையில் தயாரிக்கப்படும் பஞ்சாமிர்தம் தரமாகவும், சுவையாகவும் இருப்பதாலும் பக்தர்கள் நலன் கருதி, லாப நோக்கம் இல்லாமல், உற்பத்தி விலைக்கே வழங்கப்படுவதாலும், பக்தர்களுக்கு கூடுதல் இடங்களில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாலும், கடந்த மூன்று ஆண்டுகளாக அதிக அளவில் விற்பனை ஆகி வருவது குறிப்பிடதக்கது. மேலும் திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரமணியம் மற்றும் உறுப்பினர்கள் கோவிலின் இணை ஆணையர் மாரிமுத்து மற்றும் கோவில் அதிகாரிகள் தினந்தோறும் பஞ்சாமிர்தம் விற்பனையாகும் மையத்தை ஆய்வு செய்து ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கி, வரும் பக்தர்களுக்கு சிரமம் இன்றி தேவைகளை நிறைவேற்றுவதால் இந்த சாதனைக்கு ஒரு முக்கிய காரணம் என வரும் பக்தர்களும் சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு அமருமிடத்திற்குச் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீனகுமார் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.




■ மதுரை மாவட்டம் ஆட்சியர் அலுவலகம் முன்பு கிஞ்கிதி அனைத்து துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக, 21 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியத்தின், மதுரை மாவட்ட தலைவர் அ. இளங்கோ அவர்கள் தலைமையில், மாநில செயலாளர் ந.சண்முகசுந்தரம், ஜாகிர் உசேன் முன்னிலையில், சுரேஷ் வரவேற்புரை ஆற்றி, சிறப்பு அழைப்பாளர் கண்டன பேருரையை மாநில பொருளாளர் திலகர் சிறப்புரை ஆற்றிய, இக்கூட்டத்தில் பாலகுமாரன், ரவிக்குமார், ரஃபிக் ராஜா, உமா மகேஸ்வரி, சங்கீதா, வேம்படியான், சரவணகுமார், இளமாறன், சுதாகர், செந்தில்குமார், ராஜேஷ், பாலமுருகன், சக்திவேல் அனைத்து அரசுதுறை சார்ந்த நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு நிர்வாகிகள் பேருரை ஆற்றினர்.




# ராணி வேலு நாச்சியார் சேனை சார்பில் வேலு நாச்சியார் வேடம் அணிந்து வந்து மாவட்ட ஆட்சியரிடம் புகார்

திண்டுக்கல், டிச.30-

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கட்டிடத்தில் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்த வேலு நாச்சியார் வளாகம் என்ற பெயர் பலகையை வைக்க வேண்டும்.

திண்டுக்கல் பேருந்து நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வரும் பேருந்தில் பெயர் பலகை முன்பு இருந்தது போல் வேலு நாச்சியார் அலுவலகம் என பெயர் வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி திண்டுக்கல் மாவட்ட ராணி வேலு நாச்சியார் சேனை சார்பில்,வீர வேலு நாச்சியார் வேடம் அணிந்து மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். இதையடுத்து மாவட்ட ஆட்சியரும் புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.



# ஊட்டி அருகே தோடர் பழங்குடியின மக்களின் 'மொற்பர்த்' புத்தாண்டு பண்டிகை கோலாகலம்

ஊட்டி, டிச.30-

நீலகிரி மாவட்டத்தில் தோடர், கோத்தர், காட்டு நாயக்கர், பனியர், இருளர், குறும்பர் இன பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் தங்கள் உடை, உணவு முறை, வழிபாட்டு முறை, திருமணம், இறப்பு என தங்களின் அனைத்து வாழ்வியல் நிலையிலும், தங்கள் முன்னோர் விட்டுச் சென்ற பாரம்பரியத்தை பின்பற்றுகின்றனர்.

தோடரின மக்கள் ஊட்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில், தங்களுடைய மந்துகளில் வசிக்கின்றனர். இங்கு 'மொற்பர்த்' என்ற புத்தாண்டுப் பண்டிகை ஆண்டுதோறும் டிசம்பர் இறுதியிலோ அல்லது ஜனவரி முதல் வாரத்திலோ கொண்டாடப்படுவது வழக்கம்.

நடப்பாண்டு 'மொற்பர்த்' பண்டிகை, தோடரின மக்கள் வசிக்கும் மந்துகளின் தலைமை மந்தான தலைகுந்தா அருகேயுள்ள முத்தநாடு மந்தில் நேற்று சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதில், நீலகிரி மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பெரும்பாலான தோடரின மக்கள் கலந்து கொண்டு, முத்தநாடு மந்தில் உள்ள பழமை வாய்ந்த 'மூன் போ' மற்றும் 'அடையாள் ஓவ்' கோயில்களில் சிறப்பு வழிபாடு நடத்தினர்.

கோயில் வளாகத்துக்குள் செல்ல ஆண்களுக்கு மட்டுமே அனுமதி உள்ளதால், தோடரின ஆண்கள் தங்கள் பாரம்பரிய உடையணிந்து மண்டியிட்டு வழிபாடு நடத்தினர். ஆண்கள் வழிபாடு நடத்தி முடிந்ததும், பெண்கள் கொண்டாட்டத்தில் இணைந்தனர். பின், தங்கள் பாரம்பரிய பாடல்களை பாடிய படி நடனமாடினர்.

இவர்களை தொடர்ந்து ஆண்கள் நடனமாடினர். பின்னர், இளைஞர்கள் இளவட்டக் கற்களை தூக்கி தங்கள் இளமையை நிரூபித்தனர். பின்னர், அனைவருக்கும் பிரத்யேக உணவு வழங்கப்பட்டது. விழாவில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். தோடரின மக்கள் தலைவர் மந்தேஸ் குட்டன், அடையாள்குட்டன், பீட்ராஜ், நார்தே குட்டன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# "திமுக ஆட்சிக்கு வந்த பிறகுதான் கஞ்சா கலாச்சாரம் உச்சத்தை அடைந்துள்ளது" -அன்புமணி

சென்னை, டிச.30-

அனைத்துத் துறைகளிலும் தோல்வியடைந்து விட்ட திமுக அரசு, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதில் படுதோல்வி அடைந்து விட்டது என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னையில் இருந்து திருத்தணி சென்ற வடமாநில இளைஞரை திருத்தணி தொடர்வண்டி நிலையத்தில் கஞ்சா போதையில் இருந்த 4 சிறுவர்கள் சரமாரியாக வெட்டி ரீல்ஸ் எடுத்து வெளியிட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாட்டின் சிறுவர்களையும், இளைஞர்களையும் சீரழித்து வரும் போதைப் பொருள்களை கட்டுப்படுத்த திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது.



மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த சுராஜ் என்ற தொழிலாளி சென்னையில் இருந்து திருத்தணிக்கு மின்சார தொடர்வண்டியில் பயணம் செய்திருக்கிறார். திருவாலங்காடு தொடர்வண்டி நிலையத்தில் அந்த தொடர்வண்டியில் ஏறிய 4 சிறுவர்கள் கஞ்சா போதையில் தங்களிடமிருந்த அரிவாளை எடுத்து அவரை வெட்டுவது போல மிரட்டியுள்ளனர். அதை அவர்களில் ஒருவன் காணொலியில் பதிவு செய்திருக்கிறான். இதனால் அச்சமடைந்த சுராஜ், அவர்களை தடுத்து விட்டு, திருத்தணி தொடர்வண்டி நிலையத்தில் இறங்கியுள்ளார்.

ஆனால், அவரை விடாமல் துரத்திச் சென்ற சிறுவர்கள் தொடர்வண்டி நிலையத்தில் வைத்து அந்த இளைஞரை சரமாரியாக வெட்டி அதை காணொலியாக பதிவு செய்து இணையத்தில் பரவவிட்டுள்ளனர். படுகாயங்களுடன் மயங்கிக் கிடந்த இளைஞரை அங்குள்ள மக்கள் மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். இந்த நிகழ்வு குறித்த செய்தியை கேட்கும்போதே நெஞ்சம் பதறுகிறது; உடல் நடுங்குகிறது.

பள்ளி செல்ல வேண்டிய வயதில் உள்ள சிறுவர்கள் கஞ்சா போதைக்கு அடிமையாகி பொதுமக்கள் முன்னிலையில் தொடர்வண்டியிலும், தொடர்வண்டி நிலையத்திலும் ஒருவரை அரிவாளால் வெட்டி படம் பிடித்து வெளியிடத் துணிகிறார்கள் என்றால் தமிழ்நாட்டில் கஞ்சா புழக்கமும், அதனால் ஏற்படும் தாக்கமும் எந்த அளவுக்கு பெருகியிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும். இந்த சீரழிவுக்கு முழுக்க முழுக்க திமுக அரசு தான் பொறுப்பேற்க வேண்டும்.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தான் தமிழ்நாட்டில் கஞ்சா கலாச்சாரம் உச்சத்தை அடைந்தது. இது தொடர்பாக கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் தேதி முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

அதைத் தொடர்ந்து 28.07.2022ஆம் நாள் போதைப் பொருள்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வலியுறுத்தி எனது தலைமையில் போராட்டமும் நடத்தப்பட்டது. ஆனால், எந்த பயனும் இல்லை.

தமிழ்நாட்டிற்கு ஆந்திராவிலிருந்து தான் அதிக அளவில் கஞ்சா கடத்தி வரப்படுகிறது என்பதால் எல்லையோர மாவட்டங்களில் அதன் புழக்கம் அதிகமாக இருக்கிறது என்றும், அதைத் தடுக்க வேண்டும் என்றும் மக்கள் உரிமை மீட்பு பயணத்தின் போது திருத்தணியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசினேன்.

கடந்த வாரம் திருத்தணியில் நடைபெற்ற மகளிர் உரிமை மீட்புப் பயணத்தில் பேசிய பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணியும் இதே கருத்தை வலியுறுத்தினார். அடுத்த வாரத்திலேயே அதே திருத்தணியில் கஞ்சா போதையில் சிறுவர்கள் அட்டகாசம் செய்திருப்பதிலிருந்தே இந்த விஷயத்தில் திமுக அரசு எந்த அளவுக்கு செயலற்று கிடக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

அனைத்துத் துறைகளிலும் தோல்வியடைந்து விட்ட திமுக அரசு, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்களைக் கட்டுப்படுத்துவதில் படுதோல்வி அடைந்து விட்டது. அதனால் பொதுவெளிகளில் பொதுமக்கள் அச்சமின்றி நடமாட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு காரணமான திமுகவுக்கு வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத பாடத்தைப் புகட்டுவார்கள்." என தெரிவித்துள்ளார்.



# 'நலம் காக்கும் ஸ்டாலின்' 844 மருத்துவ முகாம்களில் 13 லட்சம் பேர் பயனடைந்தனர்

சென்னை, டிச.30-

தமிழகம் முழுவதும் 21 வாரமாக நடைபெற்ற 844 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்களில் 13 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 'நலம் காக்கும் ஸ்டாலின்' சிறப்பு மருத்துவ முகாமை முதல்வர் ஸ்டாலின் கடந்த ஆகஸ்ட் 2ம் தேதி தொடங்கி வைத்தார்.

தமிழகம் முழுவதும் மொத்தம் 1,256 இடங்களில் முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, வாரம்தோறும் சனிக்கிழமை மட்டும் நடந்து வந்த முகாம், தற்போது வியாழக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்று வருகிறது.

இந்த முகாம்களில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, இதயம், நுரையீரல், எலும்பியல், நரம்பியல், தோல், காது, மூக்கு, தொண்டை, மகப்பேறு, இயன்முறை மருத்துவம், பல், கண், மனநலம், குழந்தைகள் நலம் ஆகிய மருத்துவ சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு வழங்கப்படுகின்றன.

பரிசோதனைகள் மட்டுமின்றி, முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் போன்ற சேவைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், 21வது வாரமாக நேற்று முன்தினம் 44 இடங்களில் நடந்த முகாம்களில் 65,147 பேர் பயனடைந்தனர். இதுவரை 21 வாரமாக நடைபெற்றுள்ள 844 முகாம்களில் 13 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர்.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலை ஒன்றிய போடிப்பட்டியில் அருணா மண்டபத்தில் வேல் வழிபாட்டு வைபவம், வேல் வழிபாட்டு மன்றம் சார்பில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் முருக பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். பிரசாதம் மற்றும் அன்னதானங்கள் வழங்கப்பட்டது.



# அலங்காநல்லூரில் தனியரசு பேரவை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

அலங்காநல்லூர்.டிச.30

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் தனியரசு பேரவை சார்பில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தனியரசு அவர்களின் உத்தரவின் பேரில், ஆலோசனை கூட்டம் மாவட்ட தலைவர் அழகாபுரி பார்த்திபன் தலைமையிலும், மாவட்ட செயலாளர் அய்யூர் தயாளன் முன்னிலையிலும் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர் நல்லையன் வரவேற்றார். நிர்வாகிகளுக்கு தனியரசு செல்போன் மூலம் வீடியோகாலில் வரும் 2026 சட்டமன்றத் தேர்தல் குறித்து, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். மாவட்ட தலைவர் பார்த்திபன், மாவட்ட செயலாளர் தயாளன் ஆகியோர் தலைமையிலும், நிர்வாகிகளுக்கு சோழவந்தான் தொகுதி வேட்பாளர் தலைவர் யாரை கை காண்பிக்கிறாரோ அவருக்காக இரவு பகல் பாடுபட்டு, அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றியடைய செய்ய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னதாக மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பல்சர்பாலா, மோகேஷ், பாரதி, ஆனந்த், நாகேந்திரன், செல்வா, வெங்கட்ராமன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

# 2026 புத்தாண்டு கொண்டாட்டம்: தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பணியில் ஒரு லட்சம் போலீஸார்

சென்னை, டிச.30-

புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு நட்சத்திர விடுதிகள், பண்ணை வீடுகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பணியில் தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஆங்கிலப் புத்தாண்டு பிறக்க இன்னும் 2 நாட்களே உள்ளன. கொண்டாட்டத்தில் ஈடுபட பொதுமக்கள் தயாராகி வருகின்றனர். பல்வேறு ஏற்பாடுகளை சென்னையில் உள்ள நட்சத்திர விடுதிகள் செய்து வருகின்றன. டிசம்பர் 31ம் தேதி (புதன்கிழமை) நள்ளிரவு ஓட்டல்கள், கடற்கரை, ரிசார்ட்டுகளில் உற்சாகம் களைகட்டும்.

டிசம்பர் 31ம் தேதி மாலை 6 மணிக்குத் தொடங்கி அடுத்த நாள் (ஜன.1) அதிகாலை வரை



நடைபெறும் புத்தாண்டு நிகழ்ச்சிகளில் எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் தவிர்ப்பதற்காக காவல் துறை பல்வேறு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஹோட்டல்கள், நட்சத்திர உணவு விடுதிகள், கேளிக்கை விடுதிகள் ஆகியவற்றுக்கு வரும் வாகனங்கள் முறையாக சோதனையிட்டு பதிவு செய்வது, அனைத்து நுழைவு வாயில்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்துவது, நிகழ்ச்சி மற்றும் விருந்து நடைபெறும் பகுதிகளில் கண்காணிப்பு கேமரா பொருத்துவது போன்ற பணிகள் நடைபெறுகின்றன.

அனுமதிக்கப்பட்ட அரங்கத்தில் மட்டுமே புத்தாண்டு நிகழ்ச்சிகளை நடத்துவது உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும் நீச்சல் குளத்துக்கு செல்லும் வழிகள் அனைத்தும் அடைக்க வேண்டும். வாகனங்களை அந்தந்த ஹோட்டல்களின் வாகன நிறுத்துமிடத்திலேயே நிறுத்த வேண்டும். மதுபானங்கள் அனுமதிக்கப்பட்ட மதுபானக் கூடத்திலேயேபரிமாற வேண்டும்.

காவல் துறையால் அளிக்கப்படும் நேரக் கட்டுப்பாடு கட்டாயமாக பின்பற்ற வேண்டும். கேளிக்கை நிகழ்ச்சிகளின்போது பெண்களை கேலி செய்வதைத் தடுக்க போதுமானபாதுகாப்பு ஊழியர்களை; குறிப்பாக பெண் பாதுகாவலர்கள் நியமிக்க வேண்டும் என கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கட்டுப்பாடுகளை மீறும் ஹோட்டல்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை எச்சரித்துள்ளது. சென்னை மட்டும் அல்லாமல் நெல்லை, மதுரை, திருச்சி, கோவை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாட்டம் களைகட்டும் என்பதால், அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீஸார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட உள்ளனர். வாகன பந்தயத்தில் ஈடுபடுவோர், மது போதையில் வாகனம் ஓட்டுவோரை பிடிக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் சாலைத் தடுப்புகள் அமைக்கப்பட உள்ளன.

அதுமட்டும் அல்லாமல் முக்கிய பகுதிகளில் ஆம்புலன்ஸ்கள் நிறுத்தி வைக்கப்பட உள்ளன. அரசு மருத்துவமனைகளில் கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்களும் உஷார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்ட உள்ளனர்.

# யுபிஎஸ்சி தேர்வுகளில் தமிழகத்தின் சரிவை மீட்டெடுத்த ‘நான் முதல்வன்’: உதயநிதி பெருமிதம்

சென்னை, டிச.30-

யுபிஎஸ்சி தேர்வுகளில் பீடி சுற்றும் தொழிலாளி மகள் முதல் விவசாயி மகள் வரை தேர்ச்சி பெறுவதற்குக் காரணமாக அமைந்த ‘நான் முதல்வன்’ திட்டம், யுபிஎஸ்சி தேர்வுகளில் தமிழகத்தின் சரிவை மீட்டெடுத்ததாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சமூக வளர்ச்சிப் பாதையில் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக நாட்டிலேயே தமிழகம் முன்னணியில் இருந்து வருகிறது. கல்வியும், வாய்ப்புகளும் அனைவருக்கும் சமமாக கிடைக்க வேண்டும் என்ற திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையே இந்த முன்னேற்றத்துக்கு காரணமாகும்.

எனினும், 2017ம் ஆண்டுக்கு பிறகு மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (யுபிஎஸ்சி) நடத்தும் குடிமைப் பணி தேர்வுகளில் தமிழக மாணவர்களின் பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து வந்தது. 2021ல் தேர்ச்சி விகிதம் 27ஆக சரிந்ததை கண்டறிந்த தமிழக அரசு, அதை சரிசெய்ய ‘நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவு’ என்ற புதிய முன்னெடுப்பை 2023ல் தொடங்கியது.

பெருநகரங்களுக்கு வெளியே வசிக்கும் கிராமப்புற மாணவர்களுக்கு தரமான பயிற்சியும், வழிகாட்டுதலும் கிடைக்காததே சரிவுக்குக் காரணம் என்பதை உணர்ந்து இந்த திட்டம் உருவாக்கப்பட்டது. சென்னை, கோவை, மதுரையில் தங்குமிடம் மற்றும் உணவுடன் கூடிய சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

659ஆக உயர்வு... இதன் விளைவாக, 2023-24ம் ஆண்டில் 453 பேரும், 202425ம் ஆண்டில் 559 பேரும் தேர்ச்சி பெற்றனர். நடப்பு 2025-26ம் ஆண்டில் தேர்ச்சியாளர்கள் எண்ணிக்கை 659ஆக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில் மட்டும் 155 மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களில் 87 பேர் தமிழக அரசின் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சி மையத்தில் பயின்றவர்கள் என்பதே, அரசின் திட்டத்துக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றியாகும். குடிமைப் பணித் தேர்வுகளை தொடர்ந்து தற்போது எஸ்எஸ்சி, ரயில்வே மற்றும் வங்கித் தேர்வுகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வங்கி அதிகாரி... தென்காசியை சேர்ந்த பீடி சுற்றும் தொழிலாளியின் மகள் இன்பா ஐபிஎஸ் அதிகாரியானதும், தருமபுரியைச் சேர்ந்த விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த புவனேஸ்வரி வங்கி அதிகாரியானதும் இத்திட்டத்தின் உண்மையான வெற்றிக்கு சான்றுகளாக அமைந்துள்ளன.

பொருளாதாரச் சூழல் அல்லது வசிப்பிடம் ஒருவரது வெற்றிக்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக உள்ள திமுக அரசு, தகுதி மற்றும் வெளிப்படைத்தன்மையின் அடிப்படையில் மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து வழங்கும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செங்கல்பட்டு மாவட்டத்தில் 22 இடங்களில் பறவைகள் குறித்த கணக்கெடுப்பு

செங்கல்பட்டு, டிச.30-

செங்கல்பட்டு மாவட்டத்தில், வனத்துறை சார்பில், சுமார் 22 இடங்களில் நீர், நில பறவைகள் குறித்த கணக்கெடுப்பு பணி கடந்த 2 நாட்களாக நடைபெற்றது. இதில், 84 வகையான பறவை இனங்களும், 1,000க்கும் மேற்பட்ட பறவைகளும் அடையாளம் காணப்பட்டது.



பறவைகள், சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் உயிரினமாகும். எனவே, பறவை இனத்தையும், அவற்றின் வாழ்விடங்களையும் பாதுகாக்க, தமிழக அரசு மாநிலம் முழுவதும், 2,000க்கும் மேற்பட்ட இடங்களில் (ஈர நிலங்கள் மற்றும் நிலப்பகுதிகள்) மிகப்பெரிய அளவில் ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பை 2023ம் ஆண்டு முதல் தொடர்ந்து நடத்தி வருகிறது.

அதன்படி, வனத்துறை சார்பில், இந்த ஆண்டுக்கான ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பு டிச. 27, 28 ஆகிய 2 நாள்கள் நடைபெற்றன. செங்கல்பட்டு மாவட்டத்தில், 22 இடங்களில் நீர், நில பறவைகள் கணக்கெடுப்பு பணி நடைபெற்றது.

இதில் வனத்துறையினர் தன்னார்வ அமைப்பினர், கல்லூரி மாணவர்கள், தொழில்முறை புகைப்பட கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திருப்போரூர், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர் உள்ளிட்ட, 22 ஈர நில பகுதிகளில் பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதில், 84 வகையான பறவை இனங்களும், 1,000க்கும் மேற்பட்ட பறவைகளும் அடையாளம் காணப்பட்டது. 2ம் கட்டமாக நிலப்பரப்புகளில் கணக்கெடுப்பு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என, வனத்துறையினர் தெரிவித்தனர்.

# “வரும் சட்டமன்ற தேர்தலில் நீதியின் நெருப்பில் திமுக சுட்டு பொசுக்கப்படும்’’ - நயினார் நாகேந்திரன்



சென்னை, டிச.30-

டாஸ்மாக் மாடல் அரசின் கீழ் போதையின் பிடியில் சிக்கியுள்ள தமிழகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைக் குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கரூர் மாவட்டம் குளித்தலை அருகே கழுகூரில் அதீத மதுபோதையில் இளைஞர் ஒருவர், விளையாடிக் கொண்டிருந்த 7 வயது சிறுமியைத் தூக்கிச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் நெஞ்சைப் பதைபதைக்க வைக்கின்றன. அரசியல் தலைவர் என்பதையும் தாண்டி ஒரு தகப்பனாக இச்சம்பவத்தை என்னால் ஜீரணித்துக் கொள்ளவே முடியவில்லை.

பாதிக்கப்பட்ட அக்குழந்தை முழு மன மற்றும் உடல் ஆரோக்கியத்துடன் மீண்டு வர இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன். இந்த டாஸ்மாக் மாடல் அரசின் கீழ் போதையின் பிடியில் சிக்கியுள்ள தமிழகத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைக் குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. அவையனைத்திற்கும் பின்னணியில் போதையின் கரங்கள் தான் ஓங்கியிருக்கின்றன.

ஆனால், “போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம்” என வீர வசனம் பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலினின் இரும்புக்கரமோ இத்துப்போய்விட்டது. எந்தப் பெண்களுக்கும் பாதுகாப்பில்லாத ஒரு அவல ஆட்சியை நடத்திக் கொண்டு “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” என்ற விளம்பரப் பதாகைகளைத் தூக்கிப் பிடிக்க திமுகவினர் கூனிக் குறுக வேண்டும்.

மழலை மாறாத குழந்தையைச் சீரழித்த அக்கொடும் குற்றவாளியும், கடந்த நான்கரை ஆண்டுகளாகப் பெண்களின் பாதுகாப்பை அடகு வைத்து ஆட்சி நடத்தும் திமுகவும் தயவு தாட்சண்யமின்றி தண்டிக்கப்பட வேண்டியவர்கள். வரும் சட்டமன்றத் தேர்தலில் நீதியின் நெருப்பில் திமுக சுட்டுப் பொசுக்கப்படும்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



# நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு சாதனை

கார்வார், டிச.30-

நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு சாதனை படைத்துள்ளார்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கோவா, கர்நாடகா, ஜார்க்கண்ட் ஆகிய 3 மாநிலங்களில் 4 நாட்கள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். இந்நிலையில், தனது பயணத்தின் ஒரு பகுதியாக கர்நாடக மாநிலம் கார்வார் துறைமுகத்தில் இருந்து இந்திய கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கி கப்பல் மூலம் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று கடலில் பயணம் செய்தார்.

கல் வாரி வகையை சேர்ந்த நீர்மூழ்கி கப்பலான ஐஎன்எஸ் வாக்ஷீரில் இந்தப் பயணத்தை குடியரசுத் தலைவர் மேற்கொண்டார். அவருடன் கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி உள்ளிட்ட அதிகாரிகள் பயணம் செய்தனர். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுக்குப் பிறகு நீர்மூழ்கியில் பயணம் செய்த 2வது இந்திய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தான் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கர்நாடகாவின் வட கனரா மாவட்டத்திலுள்ள கார்வார் கடற்படைத் தளத்துக்கு, கோவாவில் இருந்து நேற்று காலை குடியரசுத் தலைவர் முர்மு வருகை தந்தார். கடந்த அக்டோபர் மாதம், நாட்டின் மேம்படுத்தப்பட்ட பன்முகத் தாக்குதல் திறன் கொண்ட போர் விமானமான ரஃபேலில், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பறந்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக, கடந்த 2006ம் ஆண்டு அப்போதைய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் முதல்முறையாக நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்திருந்தார். சுமார் 19 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது திரவுபதி முர்மு, நீர்மூழ்கிக் கப்பல் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

நாட்டின் மேற்கு கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள கார்வார் கடற்படைத் தளம், நாட்டின் மிக முக்கியமான பாதுகாப்பு மையங்களில் ஒன்றாக உள்ளது. இந்தப் பயணத்தின் மூலம் நாட்டின் கடல்சார் பாதுகாப்புத் தயார்நிலை மற்றும் கடற்படையின் செயல்பாட்டுத் திறனை குடியரசுத் தலைவர் முர்மு நேரடியாகப் பார்வையிட்டார்.

இது நாட்டின் பாதுகாப்புத் துறையின் உள் கட்டமைப்பு மற்றும் தன்னிறைவு மீதான நம்பிக்கையை உலகுக்கு பறைசாற்றுவதாக அமைந்துள்ளது என்று இந்திய கடற்படை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உதவி பேராசிரியர் பணிக்கான யுஜிசி நெட் தேர்வுக்கு ஹால்டிக்கெட் வெளியீடு

சென்னை, டிச.30-

பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியராக பணிபுரியவும், இளநிலை ஆராய்ச்சி படிப்புக்கான மத்திய அரசின் உதவித்தொகை பெறவும், பிஎச்டி மாணவர் சேர்க்கைக்கும் நெட் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவது அவசியம்..

தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) சார்பில் இந்த தேர்வு ஆண்டுக்கு இருமுறை (ஜூன், டிசம்பர்) கணினி வழியில் நடத்தப்படுகிறது. நடப்பாண்டுக்கான 2ம்கட்ட யுஜிசி நெட் தேர்வு, டிசம்பர் 31 முதல் ஜனவரி 7ம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. தேர்வுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான ஹால்டிக்கெட்களை என்டிஏ வெளியிட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது ஹால்டிக்கெட்டை /ugcnet.nta.nic.in/ என்ற இணையதளத்தில் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# ரூ.44,725 கோடியில் 2 கப்பல் கட்டும் திட்டங்களுக்கு வழிகாட்டுதல்

புதுடெல்லி, டிச.30-

உள்நாட்டு கப்பல் கட்டும் திறனை வலுப்படுத்துவதையும், உலகளாவிய போட்டித்தன்மையை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு 2 முக்கிய கப்பல் கட்டும் திட்டங்களை மத்திய அரசு முன்மொழிந்துள்ளது. அதன்படி, கப்பல் கட்டும் நிதி உதவித் திட்டம் (எஸ்பிஎப்ஏஎஸ்) மற்றும் கப்பல் கட்டும் மேம்பாட்டுத் திட்டம் (எஸ்பிடிஎஸ்) ஆகிய இந்த 2 திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அதற்கான அதிகாரப்பூர்வ வழிகாட்டுதல்களை மத்திய அரசு தற்போது வெளியிட்டுள்ளது. எஸ்பிஎப்ஏஎஸ் திட்டத்துக்கு மொத்தம் ரூ.24,736 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், கப்பலின் வகையைப் பொறுத்து, ஒரு கப்பலுக்கு 1525 சதவீதம் வரை அரசு நிதி உதவி வழங்கும். எஸ்பிடிஎஸ் திட்டம் ரூ.19,989 கோடி பட்ஜெட் ஒதுக்கீட்டைக் கொண்டுள்ளது. இது, நீண்ட கால திறன் மற்றும் ஆற்றல் உருவாக்கத்தில் கவனம் செலுத்துகிறது. இந்த வழிகாட்டுதல்கள் ஒரு நிலையான மற்றும் வெளிப்படையான கட்டமைப்பை உருவாக்குகின்றன.

# “கூட்டணிக்காக எங்களுக்கு யாரும் அழுத்தம் கொடுக்கவில்லை” டிடிவி.தினகரன் சொல்கிறார்



சென்னை, டிச.30-

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் இந்த ஆட்சி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருப்பதால் அதிருப்தியில் உள்ளனர். இது வரும் தேர்தலில் எதிரொலிக்கும் என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்தார்.

திருச்சியில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுகவின் நீண்டகால விசுவாசமிக்க தொண்டராக இருந்தவர் செங்கோட்டையன். அவர் கட்சியில் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்ந்தபோது, மக்களால் பேசப்படக்கூடிய ஒரு புதிய கட்சியில் (தவெகவில்) அவருக்கு அங்கீகாரம் கிடைத்திருப்பது, அவருக்கு கிடைத்த பெருமையாகத்தான் பார்க்கிறேன்.

அரசியல் அனுபவமுள்ள எந்த ஒரு கட்சியும் அழுத்தம் கொடுத்து ஒரு கட்சியை கூட்டணிக்கு வர வைக்க முயற்சிக்காது. அன்பாக, மரியாதையோடு அணுகிதான் கூட்டணிக்கு அழைப் பார்கள். பேச்சு வார்த்தை நடத்துவார்கள். எங்களுக்கு யாரும் அழுத்தம் கொடுக்கவில்லை. எங்களுடன் கூட்டணி அமைக்க விரும்பும் கட்சிகள், எங்களை அணுகி பேச்சு நடத்துவது உண்மை. ஆனால், நாங்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை. அதற்கு இன்னும் கால அவகாசம் உள்ளது. நிச்சயம் அமமுக வெற்றிக் கூட்டணி அமைக்கும்.

மதத்தின் பெயரால் காட்டுமிராண்டித்தனமான தாக்கு தல்கள் நடைபெறமால் பார்த்துகொள்வது மாநில, மத்திய அரசுகளின் கடமை. தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள், மாற்றுத்திறனாளிகள் என பலரும் இந்த ஆட்சி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் இருப்பதால் அதிருப்தியில் உள்ளனர். இது வரும் தேர்தலில் எதிரொலிக்கும். இவ்வாறு தெரிவித்தார். அப்போது மாநில அமைப்புச் செயலாளர்கள் சாருபாலா, ராஜசேகரன், தெற்கு மாவட்ட செயலாளர் செந்தில்நாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# “திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு 10 தொகுதிகள் வேண்டும்” வைகோவிடம் நிர்வாகிகள் வலியுறுத்தல்



சென்னை, டிச.30-

மதிமுக உயர்நிலைக் குழுக் கூட்டம் சென்னை எழும்பூரில் உள்ள மதிமுக தலைமைக் அலுவலகமான தாயகத்தில் நேற்று நடைபெற்றது. அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ. அர்ஜூன் ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பொதுச் செயலாளர் வைகோ, பொருளாளர் செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ, துணைப் பொதுச் செயலாளர்கள் உள்ளிட்ட உயர்நிலைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் ஏழு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழகத்தில் எஸ்.ஐ.ஆர் மூலம் 97.38 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில் தகுதியான வாக்காளர்கள் பெய ர்கள் விடுபட்டிருந்தால், உடனடியாக படிவம் 6, 7, 8 ஆகியவற்றை நிரப்பி ஜனவரி 18க்குள் வழங்க வேண்டும், கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் பெயரிலிருந்து காந்தியின் பெயரை நீக்கியது கடும் கண்டனத்திற்குரியது. புதிய சட்டத்தை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும்.

நாட்டின் பல மாநிலங்களில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களில் கிறிஸ்தவர்கள் மீது நடந்த தாக்குதல்களுக்கு கண்டனம். மதுரை திருப்பரங்குன்றம் பகுதியில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயன்ற சக்திகளை முறியடித்த தமிழக அரசுக்கும், அமைதியை காத்த மக்களுக்கும் பாராட்டு. மத்திய அரசு கொண்டு வந்து ள்ள விதை மசோதா 2025 விவசாயிகளின் உரிமைகளை பறிப்பதாகவும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாகவும் உள்ளது. இந்த மசோதாவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். 2026 சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ள கழகம் தேர்தல் நிதி திரட்டும் பணியைத் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி முதல் வாரம் முதல் வைகோ பங்கேற்கும் நிதியளிப்பு கூட்டங்கள் நடத்தப்படும் என்பன உள்ளிட்ட ஏழு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் இந்த கூட்டத்தில், நிர்வாகிகள் பலரும் வரும் சட்டப் பேரவை தேர்தலில் திமுக கூட்டணியில் குறைந்தபட்சம் 10 தொகுதிகளை கேட்டு பெற வேண்டும். கடந்த தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட நிலையில் இம்முறை தனிச்சின்னத்தில் போட்டியிட வேண்டும் என நிர்வாகிகள் வைகோவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

# “கருணாநிதியை விடவா ஈவெராவை விமர்சித்துவிட்டேன்?” - சீமான் காட்டமான கேள்வி

சென்னை, டிச.30-

‘‘திமுக யாரை எதிர்த்து தொடங்கப்பட்டது? இன்னமும் அந்தக் கிழவரை கைது செய்யாமல் ஏன் விட்டு வைத்து ள்ளீர்கள் என்று பேசியவர் கருணாநிதி தானே. ஈவெராவை கருணாநிதி விமர்சித்ததை விடவா நான் விமர்சித்து விட்டேன்?’’ என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளார்.

மறைந்த தேமுதிக தலைவர் விஜயகாந்தின் 2ம் ஆண்டு நினைவு நாளையொட்டி கோயம்பேட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் மரியாதை செலுத்திய பின் செய்தியாளர்களிடம் சீமான் கூறியதாவது: கீழடியை திராவிட நாகரீகம் என்கிறார்கள், பெருவுடையார் கோயிலை திராவிட கட்டிடக்கலை என்கின்றனர், 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திராவிடம் எங்கே இருந்தது? தமிழர் நாகரீகம் என்று அதை சொல்வதில் என்ன பிரச்சினை? திட்டமிட்டு என் மொழியை அழிக்க நினைக்கின்றனர். நான் என் மொழியை, அடையாளத்தை மீட்க வேண்டும் என்றால் திராவிடத்தை அழிக்க வேண்டும். தமிழகத்தில் திராவிடர் தமிழர் போர் நடக்கிறது. தமிழ்தேசியமா திராவிடமா? தமிழர்களா திராவிடர்களா? என்று பார்த்துவிடுவோம்.



அதேபோல் தமிழகத்தை பெரியார் மண் என்று மட்டும் சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்வது? அயோத்திதாசர், இரட்டைமலை சீனிவாசன், காமராஜர், கக்கனின் மண்ணும் இதுதானே. என்னை ஆர்எஸ்எஸ் வாதி என்கிறார் திருமாவளவன். ஆனால் அதே பாஜகவுடன் கூட்டணி வைத்து மங்களூருவில் எம்.எல்.ஏ ஆனது நானா? திருமாவளவனா? மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு திருமாவளவன் வீரவணக்கம் செலுத்தியது அரசியல் நாகரீகம் எனில், நான் பாரதியை பற்றி மேடையில் பேசுவது அநாகரிகமா?

திருமாவளவனை அண்ணனாக மதித்து ஒதுங்கி செல்கிறேன். ஏனென்றால் மோதலை எனக்கும், திருமாவளவனுக்கும் உண்டாக்கிவிட்டு, திராவிடர் கூட்டம் சந்தோஷப்படும். எனக்கு எதிரி விசிக, மதிமுக, பாமக போன்றவைகள் அல்ல. அண்ணன், தம்பிக்குள் சண்டை போட நான் வரவில்லை. அதற்காக நான் கட்சி ஆரம்பிக்கவும் இல்லை.

ஈ.வெ.ராவை அண்ணாவும் கருணா நிதியும் விமர்சித்ததை விடவா நான் விமர்சித்திருக்கிறேன்? திமுக யாரை எதிர்த்து தொடங்கப்பட்டது? திராவிடர் கழகத்தில் இருந்து திமுக ஏன் பிறந்தது? இன்னமும் அந்த கிழவரை கைது செய்யாமல் ஏன் விட்டு வைத்துள்ளீர்கள்? என்று பேசியவர் யார்? கருணாநிதி தானே. ஆனால் நான் கேள்வி மட்டும் தான் கேட்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.



■ திருப்பத்தூர் மாவட்டம். எதிர்வரும் புதிய ஆண்டு ஜனவரி 26 குடியரசு தினத்தன்று கிராம சபை முறையாக நடத்திடவும் 7 நாட்களுக்கு முன்பே அது சார்ந்து அறிவிப்பு வெளியிடவும் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் சட்ட பஞ்சாயத்து இயக்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருப்பத்தூரிலும் மாநில பொதுக்குழு உறுப்பினர் ராஜீவ் காந்தி. மூர்த்தி ஆகியோர் 1 (கிராம சபை முறையாக நடத்துவது குறித்தும் 2) திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் பணியாளர்கள் நியமித்திட கோரியும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது



# கோட்டூர் கோபிநாத சுவாமி வைகுண்ட ஏகாதசி தேர் திருவிழா இரட்டை மாட்டு வண்டி எல்லை பந்தயம்

தேனி, டிச.30-

பெரிய மாவட்டம் கோட்டூர் கோபிநாத சுவாமி வைகுண்ட ஏகாதசி தேர் திருவிழா முன்னிட்டு, மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்லை பந்தயம் ஏழு பிரிவுகளாக நடைபெற்றது. இந்த பந்தயத்தை தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் மற்றும் கீதா சசி, பேரூராட்சி சேர்மன் வீரபாண்டி ரத்தின சபாபதி, தேனி தெற்கு ஒன்றிய செயலாளர், மாலா காமராஜ் தேனி ஒன்றிய திமுக கவுன்சிலர் கலந்து கொண்டனர்.

இந்த மாட்டு வண்டி எல்கை பந்தயத்தில் கரிச்சான், புள்ளி மாடு, நடுமாடு, பெரிய மாடு, இளஞ்சிட்டு, தேன்சிட்டு, தட்டான் சிட்டு ஆகிய மாட்டு வண்டி பந்தயத்தில் கலந்து கொண்டனர்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து குறிப்பாக தேனி, திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ,ஆகிய மாவட்டங்களில் இருந்து 150க்கும் மேற்பட்ட இரட்டை மாட்டு வண்டி கலந்து கொண்டுள்ளார்கள்.

இந்த பந்தயத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டது பந்தயதாரர்களுக்கு உற்சாக கர கோஷங்களை எழுப்பி ஊக்கப்படுத்தினார். வீரபாண்டி காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் திமுக தான் வெற்றி பெறும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பேச்சு

தேனி, டிச.30-

தேனி மாவட்டம் சின்னமனூர் தேரடி பகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நூற்றாண்டு விழா பொதுக்கூட்டமானது மாநில குழு உறுப்பினர் தமிழ் பெருமாள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் வீரபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.



இந்நிகழ்வில் அவர் கூறியதாவது வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் எங்களது கூட்டணியான திமுக தான் வெற்றி பெறும் ஏனென்றால் அதிமுக

தனியாக நின்றிருந்தால் கூட எங்களுக்கு போட்டி கடினமாக இருக்கும். ஆனால் அவர்கள் சேர்ந்து வருகிற கட்சி

எங்களது வெற்றியை எளிதாக்குகின்றது எனக் கூறினார். கம்பம் ஒன்றிய துணைச் செயலாளர் மதன் தலைமையில் மாற்றுக் கட்சியில் இருந்து சுமார் 100க்கும் மேற்பட்டோர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முன்னிலையில் இணைந்தனர். இந்த பொதுக் கூட்டத்தில் மாநில செயற்குழு உறுப்பினர் ராமசாமி, தேனி மாவட்ட செயலாளர் பெருமாள், மனிதநேய மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ மதுரை வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர். ஆலாத்தூர் ரவிச்சந்திரன் சத்தியமூர்த்தி பவனில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான செல்வப் பெருந்தகையிடம், மதுரை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, ஆகிய தொகுதிகளுக்கு போட்டியிட விருப்ப மனு அளித்த போது. உடன். வடக்கு மாவட்ட பொருளாளர். மாநில பொதுக்குழு உறுப்பினர். நூர்முகமது. மாநில பொதுக்குழு உறுப்பினர்கள். திலகராஜ். ஊமச்சிகுளம் முருகன், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில்தான் ரேஷன் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்கிறது - புதிய நியாய விலைக்கடை திறப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, டிச.30-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் 150 குடும்ப அட்டை உள்ள பகுதிகளுக்கும் பகுதி நேர நியாயவிலைக்கடை திறக்க உத்திரவிட்டுள்ளார் என்றார்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் மேற்கு ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி, பழைய செம்பட்டியில் நடைபெற்ற புதிய நியாயவிலைக் கடைத்திறப்பு விழாவிற்கு கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் இராகவ்பாலஜி தலைமை தாங்கினார். மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் பெ.திலகவதி, திமுக மாநில செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் மார்க்கிரேட் மேரி, ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், கூட்டுறவு துணைப் பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) எஸ்.பி.கார்த்திகேயன், கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் செல்வகுமார், ஆகியோர் முன்னிலை வகி;த்தனர். ஆத்தூர் வட்டார பொது வியோகத்திட்ட கூட்டுறவு சார்பதிவாளார் அறிவழகன் வரவேற்றார்.

புதிய நியாயவிலைக் கடையை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கிய பின்பு அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு, பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் நலனை கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகி றார்கள். . இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் அடிப்படை வசதி வேண்டி கோரி க்கை மனு கொடுத் துள்ளனர். விரைவில் அவை நிறைவேற்றிக் கொடுக்கப்படும் என்றார். அப்போது அங்கிருந்த பொதுமக்கள் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

அரசின் திட்டங்களை மக்களுக்கு சென்றடைய செய்வதிலும், வளர்ச்சித் திட்டபணிகளை அனைத்துப் பகுதிகளிலும் சீராக நிறைவேற்றுவதிலும் இந்த அரசு உறுதியாக உள்ளது. இது மக்களுக்கான அரசு, ஏழைகளுக்கான அரசு. பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிட இந்த அரசு என்றென்றும் தயாராக உள்ளது என்றார். நிகழ்;ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், பத்மாவதி, சட்டமன்ற முகாம் மன்ற அலுவலர் வடிவேல் முருகன், ஒன்றிய பொறியாளர்கள் ராமநாதன், பாலசுப்பிரமணி, ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கைசாமி, தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, வட்ட வழங்கல் அலுவலர் பிரவீணா, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சிந்தாமணி நாகசுந்தரம், செல்வி காங்கேயன், ஊராட்சி செயலாளர் மணவாளன், ஆத்தூர் கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலை ஒன்றிய போடிப்பட்டியில் அருணா மண்டபத்தில் வேல் வழிபாட்டு வைபவம், வேல் வழிபாட்டு மன்றம் சார்பில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் முருக பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். பிரசாதம் மற்றும் அன்னதானங்கள் வழங்கப்பட்டது.

# 2026 தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியே ஆட்சியை பிடிக்கும் நயினார் நாகேந்திரன் பேச்சு

ஒட்டன்சத்திரம், டிச.30-

ஒட்டன்சத்திரம் தாராபுரம் சாலையில் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தமிழகம் தலை நிமிரதமிழனின்பயணம் என்ற தலைப்பில் தேர்தல் பிரச்சாரபரப்புரை நடைபெற்றது. பிரச்சாரத்தில் நயினார்



நாகேந்திரன் பேசியதாவது: தமிழகத்தில் தினந்தோறும் பத்து வயது குழந்தைகள் 70வயது வரை முதல் முதியவர்கள் அனைவருக்கும் பாலியல் வன்கொடுமைகள் நடைபெறுவதாகவும் கஞ்சா, புகையிலை உள்ளிட்ட போதை பொருட்கள் அதிக அளவில் புழக்கத்தில் கொண்டு வந்து அதனை குற்றங்களையும் திமுக வினரே நடத்தி வருவதாகவும் தெரிவித்தார், முதலமைச்சர் ஆட்சிபொறுப்பேற்பதற்கு முன்பு தமிழகத்தில் எங்கு தவறு நடந்தாலும் இரும்பு கரம் கொண்டு அடக்கப்படம் எனக் கூறிய நிலையில் தற்போது அந்த இரும்புக்கரம் துருப்பிடித்து இருப்பதாக தெரிவித்தார். சாத்தான்குளம் லாக்கப் டெத் நிகழ்விற்கு அ.தி.மு.க.ஆட்சி முடியும் வரை போராடியவர்கள் தற்போது தி.மு.க. ஆட்சியில்தற்போதுவரை 72 லாக்கப் மரணங்கள், 7500 கொலைகள் நடைபெற்றுள்ளதாகவும் அதனை திமுக கண்டு கொள்ளவே இல்லை.

முதலமைச்சரின் ஒரே நோக்கம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முதலமைச்சராக

அமர வைப்பதற்காகவே கூட்டணிகளை இறுக பிடித்து வைத்திருக்கிறார். தற்போது காங்கிரஸ்தி.மு.க. கூட்டணியில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பதாகவும் செய்திகள் வெளியாகி வருவதாக தெரிவித்தார். இந்நிலையில் தி.மு.க.வின் கூட்டணி வலுவிழந்து வருவதாகவும் வரும் பொங்கலுக்கு பிறகு அதிமுக பாஜகவின் கூட்டணி வலுப்பெற்று 2026 தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்வில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் திண் டுக்கல் சீனிவாசன், பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன் மாவட்டத் தலைவர் ஜெயராமன் நகர் மன்ற தலைவர் குமார் தாஸ் மற்றும் எஸ்.கே.பழனிசாமி உள்ளிட்ட பா.ஜ.க.வின் நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஆத்தூர் ஊராட்சியில் புதிய நீதிமன்ற கட்டிடம், போக்குவரத்து பணி மனை கட்டிடம் விரைவில் அமையும்

## ரூ.2 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாய கூடத்தை திறந்து வைத்து அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, டிச.30-

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சியில் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமுதாயக்கூடம் கட்டிட திறப்புவிழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை தாங்கினார். திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் மார்க்கிரரேட் மேரி, ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார் நத்தம் முருகேசன், ஒன்றிய அவைத்தலைவர் காணிக்கைசாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், தமிழகத்தை பழி வாங்கும் நோக்கோடு மோடி தலைமை



யிலான ஒன்றிய அரசு செயல்படுகிறது. நூறு நாள் வேலைத்திட்டத்தை முடக்க திட்டமிட்டு அதற்கான நிதியை மாநில அரசுக்கு தராமல் உள்ளது. இதனால் தமிழகத்தில் குறிப்பாக கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் வறுமைக்கு தள்ளப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. முந்தைய காங்கிரஸ் ஆட்சியின்போது 1 லட்சத்தி 20 ஆயிரம் கோடி நிதி வழங்கப்பட்டது. தற்போது 46 ஆயிரம் கோடிதான் நிதி வழங்குகிறார்கள். அதிலும் 12 ஆயிரம் கோடிதான் தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இருந்தாலும் தமிழக மக்கள் நலன் கருதி முதல்வர் அவர்கள் நூறு நாள் வேலைத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் என்றார். மகளிர் உரிமைத் தொகை கிடைக்கப்பெறாதவர்கள் மனு கொடுத்ததில் இரண்டாவது தவணையில் சுமார் 2 ஆயிரம் பேருக்கு மேல் மகளிர் உரிமைத் தொகை கிடைத்துள்ளது. வேலை வாய்ப்பை பொறுத்தவரை தமிழகத்திலேயே ஒரு ரூபாய் கூட வாங்காமல் அரசு பணி வழங்கிய மாவட்டமாக திண்டுக்கல் மாவட்டம் உள்ளது. குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் மட்டும் 150 ரேஷன் பணியாளர்களுக்கு பணிக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், பத்மாவதி, உதவி பொறியாளர்கள் இராமநாதன், பாலசுப்பிரமணி, சட்டமன்ற முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, வட்ட வழங்கல் அலுவலர் பிரவீணா, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் சிந்தாமணி நாகசுந்தரம், செல்வி காங்கேயன், ஊராட்சி செயலாளர் மணவாளன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000